# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 316/மா/2023
நாள் 25.07.2025

திரு ஆர். மயில்சாமி
மதுரை — முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
மதுரை மாநகராட்சி — எதிர் மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண் 5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆர்.மயில்சாமி என்பவரின் 31.08.2023 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 02.09.2023 அன்று பெறப்பட்டு 316/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண் 5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆர்.மயில்சாமி தனது 31.08.2023 முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“மதுரை மாநகரட்சி மொத்தம் ஐந்து மண்டலங்களும் 100 வார்டுகளும் உள்ள இடங்களில் பல பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் பூங்காக்கள் உள்ளன. இவைகளுக்கு அருகில் டீக்கடை மற்றும் பெட்டி கடைகளில், பல இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை பீடி சிகரெட் புகை பிடிப்பதை வாடிக்கையாக இருந்து வருகிறது. மதுரை மாநகராட்சி பொது இடங்களில் சிகரெட், மற்றும் பீடி புகைபிடிப்பது சட்டப்படி குற்றம் என்பது வெறும் கண் துடைப்பாகவே உள்ளது. பொது இடங்களில் புகைபிடிக்கும் நபர்கள் மீது மதுரை மாநகராட்சி அலுவலர் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் கண்டு கொள்ளாமல் இருந்து வருகிறார்கள். புகை பிடிப்பவர்கள் பாதிப்பு ஒரு பக்கம் இருந்தாலும், மற்றொரு பக்கம் புகை பிடிப்பவர் அருகில் உள்ள பொதுமக்கள் குழந்தைகள் பெருமளவில் பாதிப்பிற்கு உள்ளாகி வருவதுடன், சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுகிறது. எனவே பொது இடங்களில் 100 வார்டுகளில் பீடி சிகரெட் புகை பிடிப்பவர்களை பெட்டி கடை மற்றும் டீ கடைகளை கண்காணித்து Tamil Nadu Copta Act 2003ன்படி உரிய அபராதம் விதித்து புகை பிடிப்பதை கட்டுப்படுத்தியும் தடை செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்யும் கடை உரிமையாளர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டும் அனைத்து பகுதியிலும் விரைவான நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்”என்று தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 25.10.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

4. மதுரை மாநகராட்சி மாநகர் நல அலுவலர் கடிதம் எண் H4/007323/2025, நாள் 12.06.2025ல் தனது அறிக்கையில் பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.

"மதுரை மாநகராட்சியில் 5 மண்டலம், 100 வார்டு பகுதிகளில் மண்டல சுகாதார அலுவலர் மற்றும் வார்டு சுகாதார ஆய்வாளர்களை கொண்டு மண்டல வாரியாக குழு நியமித்து வாரம் ஒரு நாள் வீதம் மாதந்தோறும் புகையிலை பயன்பாடு குறித்து பள்ளிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தியும், பள்ளி மற்றும் கல்லூரி அருகில் உள்ள பெட்டி கடைகள், டீ கடைகள் நேரடி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்படுவதை வெள்ளை கல் உரங்கிடங்கில் வைத்து அழிப்பு செய்யப்படுகிறது. கடைகளில் அபராதம் விதிக்கப்பட்டு அரசு கணக்கில் கருவூலத்தில் செலுத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மதுரை மாநகராட்சியின் வார்டு பகுதிகளில் அமைந்துள்ள பொது இடங்கள் மருத்துவமனைகள் பூங்கா ஆகிய பகுதிகளில் கடைகளில் விற்பனை செய்யப்படும் பீடி சிகரெட் விற்பனை சம்பந்தப்பட்ட உரிமையாளர்களுக்கு அபராதம் விதித்தும், விற்பனை செய்யாமல் பார்த்துக் கொள்ள தெரிவித்தும் எச்சரிப்பு நோட்டீஸ் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் பீடி, சிகரெட் விற்பனை சம்பந்தப்பட்ட உரிமையாளர்களுக்கு அபராதம் விதித்த விபரம் :

| வ. எண் | ஆண்டு | அபராதம் விதிக்கப்பட்ட கடைகளின் எண்ணிக்கை | அபராத தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | 2024-2025 | 250 நபர் | 36,000/- |

மதுரை மாநகராட்சியால் மேற்கண்ட பணிகளை கொண்டு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்கள் இடையூறு ஏற்படாவண்ணம் தடுப்பு பணி மேற்கொண்டு கடை உரிமையாளருக்கு உரிய அபராதம் விதிப்பு செய்திடவும், மற்றும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு உத்தரவிடப்பட்டு தொடர் கண்காணிப்பு நிர்வாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது" என்று தெரிவித்துள்ளார்.

5. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவத்தில் 17.6.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் 17.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

> "மதுரை மாநகரட்சி மொத்தம் ஐந்து மண்டலங்களும் 100 வார்டுகளும் உள்ள இடங்களில் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் பூங்காக்கள் உள்ளன. குறிப்பாக இப்பகுதியில் மகாவீர் பள்ளி, வீரமாமுனி பள்ளி மற்றும் யூனியன் பள்ளி இவைகளுக்கு அருகில் பெட்டிகடைகளில் பீடி சிகரெட் புகைபிடிப்பதை வாடிக்கையாக இருந்து வருகிறது. பொது இடங்களில் புகைபிடிக்கும் நபர்கள் மீது மதுரை மாநகராட்சி அலுவலர் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் கண்டு கொள்ளாமல் இருந்து வருகிறார்கள். புகைபிடிப்பவர்கள் பாதிப்பு ஒரு பக்கம் இருந்தாலும், மற்றொரு பக்கம் புகைபிடிப்பவர் அருகில் உள்ள பொதுமக்கள் குழந்தைகள் பெருமளவில் பாதிப்பிற்கு உள்ளாகி வருவதுடன், சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுகிறது. எனவே பொது இடங்களில் 100 வார்டுகளில் பீடி சிகரெட் புகைபிடிப்பவர்களை பெட்டி கடை மற்றும் டீ கடைகளை கண்காணித்து Tamil Nadu Copta Act 2003ன்படி உரிய அபராதம் விதிக்கவும் தடை செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்யும் கடை உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு வேண்டிக் கொள்கிறேன்''.

7. மதுரை மாநகராட்சி சுகாதார அலுவலர் 17.06.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மதுரை மாநகராட்சியில் 5 மண்டலம், 100 வார்டு பகுதிகளில் மண்டல சுகாதாரஅலுவலர் மற்றும் வார்டு சுகாதார ஆய்வாளர்களை கொண்டு மண்டல வாரியாக குழு நியமித்து வாரம் ஒரு நாள் வீதம் மாதந்தோறும் புகையிலை பயன்பாடு குறித்து பள்ளிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தியும், பள்ளி மற்றும் கல்லூரி அருகில் உள்ள பெட்டி கடைகள், டீ கடைகள் நேரடி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்படுவதை வெள்ளை கல் உரங்கிடங்கில் வைத்து அழிப்பு செய்யப்படுகிறது. கடைகளில் அபராதம் விதிக்கப்பட்டு அரசு கணக்கில் கருவூலத்தில் செலுத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் பீடி, சிகரெட் விற்பனை சம்பந்தப்பட்ட உரிமையாளர்களுக்கு அபராதம் விதித்த விபரம் :

| வ. எண் | ஆண்டு | அபராதம் விதிக்கப்பட்ட கடைகளின் எண்ணிக்கை | அபராததொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | 2024-2025 | 250 நபர்கள் | 36,000/- |

மதுரை மாநகராட்சியால் மேற்கண்ட பணிகளை கொண்டு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்கள் இடையூறு ஏற்படா வண்ணம் தடுப்பு பணி மேற்கொண்டு கடை உரிமையாளருக்கு உரிய அபராதம் விதிப்பு செய்திடவும், மற்றும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு உத்தரவிடப்பட்டு தொடர் கண்காணிப்பு நிர்வாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.".

8. மனுதாரரின் முறையீட்டு மனு, வாக்குமூலம், மதுரை மாநகராட்சியின் மாநகர் நல அலுவலரின் அறிக்கை மற்றும் சுகாதார அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மதுரை மாநகராட்சியில் உள்ள 5 மண்டங்களும், 100 வார்டுகளும் உள்ளன என்றும், இங்கு உள்ள பள்ளிகள் குறிப்பாக மகாவீர் பள்ளி, வீரமாமுனி பள்ளி, மற்றும் யூனியன் பள்ளி மற்றும் கல்லூரிகள், மருத்துவமனைகள் அருகில் உள்ள டீக்கடை மற்றும் பெட்டிக் கடைகளில் இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை பீடி, சிகரெட் பிடிப்பதாகவும், இதனால் அவர்களுக்கு மட்டுமல்லாமல் அருகில் உள்ளவர்களும் பாதிக்கப்படுவதாகவும், இதனை மதுரை மாநகராட்சி அலுவலர்கள் கண்டுகொள்ளாமலும், நடவடிக்கை எடுக்காமலும் உள்ளனர் என்றும், எனவே, Tamil Nadu Copta Act 2003ன்படி புகைபிடிப்பவர்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்யும் கடை உரிமையாளர்கள் மீது அபராதம் விதிக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மதுரை மாநகராட்சியில் உள்ள 5 மண்டலங்களுக்கும், 100 வார்டு பகுதிகளுக்கும், மண்டல சுகாதார அலுவலர் மற்றும் வார்டு சுகாதார ஆய்வாளர்களை கொண்டு மண்டல வாரியாக குழு நியமித்து மாதந்தோறும், புகையிலை பயன்பாடு குறித்து பள்ளிகளில் விழப்புணர்வு எற்படுத்துவதாகவும், டீக்கடை மற்றும் பெட்டி கடைகளில் நேரடி ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதாகவும், தடை செய்யப்பட்ட பொருட்களை பறிமுதல் செய்யப்படுவதோடு, அபராதம் விதிக்கப்படுவதாகவும், இப்பணிகள் தொடர்ந்து மேற்க்கொள்ளப்படும் என்று மதுரை மாநகராட்சி மாநகர் நல அலவலரின் அறிக்கை மற்றும் சுகாதார அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மதுரை மாநகராட்சி சார்பில் மண்டல குழுக்கள் நியமித்து புகையிலை பயன்பாடு குறித்து பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் விழிப்புணர்வு ஏற்படுத்துவது மற்றும் தடை செய்யப்பட்ட விற்பனை செய்யும் கடை உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், பொது இடங்களில் பீடி, சிகரெட் மற்றும் புகையிலை பொருட்கள் பயன்படுத்துவதால் பொது மக்களுக்கு ஏற்படும் தீமைகளை தடுக்கும் வகையில், சிகரெட்கள் மற்றும் பிற புகையிலை பொருட்கள் (விளம்பரம் தடை மற்றும் வர்த்தகம் மற்றும் வணிகம், உற்பத்தி வழங்கல் மற்றும் விநியோகம் ஆகியவற்றை ஒழுங்குப்படுத்துதல்) சட்டம், 2003–ன்படியும் மற்றும் பொது இடங்களில் புகைப் பிடிப்பதை தடை செய்யும் விதிகள், 2008–ன்படியும் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 25–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. R. மயில்சாமி,
பிளாட் 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி,
மதுரை–625 018.

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி, தல்லாகுளம்,
மதுரை–625 002.

3) மாநகர் நல அலுவலர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம்,
மதுரை–625 002

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

29/7/25
செயலாளர்.

29/7/25